செ.வெ.எண்: 27/பிப்ரவரி நாள்: 15.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**
**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான கேரம் போட்டிகளில் இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பையினை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (15.02.2016) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான கேரம் போட்டிகளில் இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாநில அளவிலான கேரம் போட்டிகள் ஈரோடு, சூர்யா பொறியியல் கல்லூரியில் வைத்து 09.02.2016 முதல் 11.02.2016 வரை நடைபெற்றது. இப்போட்டியில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும், மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் வென்ற மாணவ, மாணவிகள் சுமார் 300 பேர் கலந்து கொண்டார்கள். இதில் இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பில் சீனியர் பிரிவில் ஒற்றையர் போட்டியில் கலந்து கொண்ட முகம்மது சதக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த எஸ்.தினேஷ்பாபு முதலிடத்தில் வெற்றி பெற்று தங்கப்பதக்கம் மற்றும் ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினையும் வென்றார். இவர் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இவ்வெற்றியைப் பெற்றார்.

மேலும் உச்சிப்புளி நேஷனல் அகாடமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் ஏ.எஸ்.தாமோதரா ஜீனியர் பிரிவு ஒற்றையர் போட்டியில் இரண்டாம் இடம் பெற்று ரூபாய் 2 ஆயிரத்து 500 ரொக்கப்பரிசு மற்றும் வெள்ளிப் பதக்கம் பெற்றார். சாதனை படைத்த வீரர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் .ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம், மாவட்ட கேரம் சங்க செயலாளர் திரு.ஏ.சிவக்குமார், மாவட்ட சாகசம் விளையாட்டு கழக செயலர் திரு.எம்.மகேஷ்வரன், வாலிபால் பயிற்சியாளர் திரு.அந்தோணி அதிர்ஷ்டராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**